நாள் 25.07.2023.

CC. No.34/2021

பெயர் : ஸ்ரீதேவி, க/பெ. அன்பரசன்

PW1

**முதல் விசாரணை தொடர்ச்சி** :

இதற்கு முன்பு கடந்த 23.02.2023-ம் தேதி முதல் விசாரணை பகுதியாக சாட்சியம் அளித்துவிட்டு சென்றேன். அன்றைய தினம் முதல் விசாரணையில், மேற்படி பாடலீஸ்வரனை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிதான் நான் அன்றைய தினம் சாட்சியம் அளித்த பாடலீஸ்வரன் என்பவர் ஆவார். நான் அளித்த புகாரின்பேரில் பேரளம் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

நான் அளித்த புகார் என்னால் கைப்பட எழுதி கொடுக்கப்பட்டது. புகாரில் எதிரியின் மாடு முட்டியதில் எங்கள் மாடு கயிற்றினை அவிழ்த்துகொண்டு ஓடிவிட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புகாரில் எனது தாயாருக்கு காயம் ஏற்பட்டதாக எதுவும் சொல்லவில்லை. என்னையும், எனது தாயாரையும் கீழே தள்ளிவிட்டு கட்டையால் அடித்ததாக புகாரில் சொல்லியுள்ளீர்களா என்றால் இருவரையும் கீழே தள்ளிவிட்டார். என்னை கட்டையால் அடித்தார். அடிபட்ட காயத்துடன் காவல் நிலையத்திற்கு சென்றதாக புகாரில் சொல்லியுள்ளேன். அடிபட்ட காயத்திற்கு எங்கு மருத்துவ சிகிச்சை எடுத்து கொண்டீர்கள் என்றால் இரவு நேரம் அதிகம் ஆகிவிட்டதால் நான் சிகிச்சைக்கு எங்கும் செல்லவில்லை. எனக்கு காயம்பட்டதாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மாடு அவிழ்த்துகொண்டு ஓடிவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில், மாடு முட்டியதில் ரத்தம் வந்ததாக சொல்லியுள்ளதை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால்

புகாரில் மாடு முட்டியதாக சொல்லியுள்ளேன். மாட்டிற்கு சிகிச்சை எதுவும் எடுக்கவில்லை. ரவி, த/பெ. பிச்சை என்பவர் யார் என்றால் எனது தகப்பனார். எனது தகப்பனார், எதிரியின் தகப்பனார் மற்றும் சித்தப்பா மீது கடந்த 05.05.2018-ம் தேதி புகார் அளித்து குற்ற எண்.176/2018 என்ற எண்ணில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் SC. No.91/2021-ல் வழக்கு முடிவடைந்துவிட்டது என்றால் சரிதான். திருமியச்சூர் கிராமம் புல எண்.6/1 மற்றும் 6/3-ல் பட்டா எண்.524 -ல் எனது குடும்பத்திற்கும், எதிரியின் குடும்பத்திற்கும் இடையே பிரச்சனை உள்ளது என்றால் இந்த வழக்கு புகாருக்கு பின்னிட்டு ஏற்பட்ட பிரச்சனை. அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரங்கநாதன் (எ) ரங்கன் மகள் ஜோதி என்பவர் திருமியச்சூரில் வசித்து வந்தார் என்றால் சரிதான். அவர் குடியிருந்த இடம் தான் மேற்படி புல எண்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ரங்கநாதன் (எ) ரங்கன் மகள் ஜோதி என்பவரிடமிருந்து மேற்படி புல எண்கள் உள்ள இடத்தை எதிரியின் தகப்பனார் கிரயம் பெற்று அனுபவித்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த இடம் தொடர்பாக எனது தகப்பனாருக்கும், எதிரியின் தகப்பனாருக்கும் இடையே பிரச்சனை இருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அது சம்பந்தமாக, எதிரியின் தகப்பனார் கடந்த 14.11.2016-ல் பேரளம் காவல் நிலையத்தில் எனது தகப்பனார் மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி பிரச்சனை தொடர்பாக, திருவாரூர் வருவாய் கோட்டாச்சியர் முன்பாக பிரச்சனை நடந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் தெருவில் சுமார் 150 வீடுகள் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் எங்கள் வீட்டு அருகே சுமார் 5 வீடு தான் இருக்கும். அதன்காரணமாக அங்கு யாரும் கூட்டமாக நிற்கவில்லை. புகாரில் சம்பவம் யார் யாருக்கு தெரியும் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ரங்கநாதன் (எ) ரங்கன்

எனது தாத்தாவின் உடன்பிறந்த சகோதரர். மேற்படி இரண்டு புல எண்கள் எனது வீட்டின் அருகில்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் எதிரியின் தகப்பனார், எதிரிக்கு பாத்தியப்பட்டது என்றாலும், எனது பாட்டனார் சொத்து நீங்கள் எவ்வாறு வாங்கினீர்கள் என்று நான்தான் எதிரியிடம் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. அதன்காரணமாக, எதிரியின் மீது கற்பனையாக ஒரு புகார் அளித்து, அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இடப்பிரச்சனைக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை. நான் M.A., B.Ed வரை படித்துள்ளேன். எனக்கு நன்கு எழுத, படிக்க தெரியும். நான் புகாரிலும், முதல் விசாரணையிலும் சொன்னதுபோல், எவ்விதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இடப்பிரச்சனையில் பழி வாங்கவேண்டும் என்பதற்காக எதிரியின் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :

இல்லை.

(ஒம்/- S. விஜய் ஆனந்த்)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் (மு.கூ.பொ.), நன்னிலம்.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
NANNILAM.

**CC. No.34/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | PW2 (LW 2) | Caste | : | |
| Name | : | செல்வி | Age | : | 45 |
| Husband's Name | : | ரவி | Occupation | : | விவசாயம் |
| Village | : | திருமியச்சூர் | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 25th day of July 2023.

25.07.2023

**(Accused present).**

**முதல் விசாரணை** :

நான் தற்சமயம் திருமியச்சூர் வடபாதியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஸ்ரீதேவி எனது மூத்த மகள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நானும், எனது மகள்கள் ஸ்ரீதேவி மற்றும் சரண்யாவுடன் வீட்டில் இருந்தோம். அப்போது இரவு சுமார் 12.00 மணி இருக்கும். எங்கள் வீட்டை மாட்டை எங்கள் வீட்டு கொல்லையில் கட்டிபோட்டிருந்தோம். ஆஜர் எதிரி வீட்டு மாட்டை எனது வீட்டில் கட்டியிருந்த எங்கள் மாட்டை முட்டியது. ஆஜர் எதிரி வீட்டில் வேலை செய்யும் தன்ராஜ் என்பவரிடம் விபரம் சொன்னேன். அப்போது, ஆஜர் எதிரி கட்டையுடன் வந்து என்னையும், எனது மகள் ஸ்ரீதேவியையும் அடித்தார். சொல்ல முடியாத வார்த்தைகளால் திட்டினார். காவல் நிலையத்திற்கு செல்வதற்கு வழிவிடவில்லை. எங்கள் வீட்டிலிருந்து காவல் நிலையம் செல்வதற்கு ஆஜர் எதிரி வீட்டை கடந்துதான் செல்ல வேண்டும். இது சம்பந்தமாக எனது மகள் பேரளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்த புகாரின்பேரில் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

காவல் நிலையத்திற்கு புகார் அளிப்பதற்காக நானும், எனது மகளுடன் சென்றேன். காயம்பட்டதற்கு சிகிச்சை எடுத்து கொண்டீர்களா என்றால் எனக்கு காயம் ஏற்படவில்லை. எனது மகளுக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை எடுத்து கொண்டோம். மேற்படி விபரம் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். எனது கணவர் ரவி, த/பெ. பிச்சை என்றால் சரிதான். மாட்டிற்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சைக்கு எதுவும் செல்லவில்லை. நான் சொல்வதுபோல், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், காயம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது கணவர், எதிரியின் தகப்பனார் மற்றும் சித்தப்பா மீது கடந்த 05.05.2018-ம் தேதி புகார் அளித்து குற்ற எண்.176/2018 என்ற எண்ணில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் SC. No.91/2021-ல் வழக்கு முடிவடைந்துவிட்டது என்றால் சரிதான். எங்கள் இடத்தை அவர்கள் எடுத்து வைத்துகொண்டு அவர்கள் பிரச்சனை செய்கிறார்கள். ரங்கநாதன் (எ) ரங்கன் என்பவர் எனது மாமனார். எனது கணவர் ரவிக்கு மேற்படி ரங்கநாதன் சித்தப்பா. ரங்கநாதன் குடியிருந்த இடத்தை எதிரி பாடலீஸ்வரன் வாங்கியதால் தான் எங்களுக்குள் பிரச்சனை. ஜோதி மேற்படி ரங்கநாதனின் மகள். ஜோதியிடமிருந்து தான் பாடலீஸ்வரன் அந்த இடத்தை வாங்கி கொண்டார் என்றால் சரிதான். நான் மேற்படி இடத்தை வாங்க கூடாது என்று எதிரி பாடலீஸ்வரனிடம் சொன்னதில் அவர் மீறி அதை வாங்கியதால் ஏற்பட்டது தான் பிரச்சனை. கடந்த 14.11.2016-ல் எதிரியின் தகப்பனார் அன்பழகன் எனது கணவர் மீது பேரளம் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார் என்றால் ஞாபகம் இல்லை. அது சம்பந்தமாக, வருவாய் கோட்டாச்சியர் திருவாரூர் அவர்களால் விசாரணை நடத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி விசாரணையில், இனிமேல் பிரச்சனை செய்ய கூடாது என்று ரூ.25,000/-த்திற்கு எதிரி பிணை எழுதி

கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். ஆனால், அவ்வாறு எழுதி தர மறுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. சர்வே நம்பர் எனக்கு தெரியாது. எனது வீட்டிற்கு அருகே தான் மேற்படி இடம் உள்ளது. பாடலீஸ்வரன் வீடு எனது வீட்டிற்கு அருகில் தான் உள்ளது. எனது வீட்டிற்கும், எதிரி வீட்டிற்கும் இடையே பிரச்சனைக்குரிய இடம் உள்ளது. மேற்படி இடம் எதிரி பாடலீஸ்வரன் சகோதரர் அகதீஸ்வரன் பெயரில் உரிமை மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி SC. No.91/2021 வழக்கில் நானும் சாட்சியம் அளித்துள்ளேன். நான் சொல்வதுபோல், எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :

இல்லை.

(ஒம்/- S. விஜய் ஆனந்த்)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் (மு.கூ.பொ.), நன்னிலம்.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
NANNILAM.

**CC. No.34/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | PW3 (LW 3) | Caste | : | |
| Name | : | சரண்யா | Age | : | 24 |
| Father's Name | : | ரவி | Occupation | : | Relationship Officer - HDFC Bank மயிலாடுதுறை கிளை |
| Village | : | திருமியச்சூர் | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 25th day of July 2023.

25.07.2023

**(Accused present).**

**முதல் விசாரணை** :

நான் திருமியச்சூர் வடபாதியில் குடியிருந்து மயிலாடுதுறை HDFC வங்கியில் Relationship officer ஆக பணியாற்றி வருகிறேன். அ.சா.1 எனது அக்கா, அ.சா.2 எனது தாயார். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 24.10.2020-ம் தேதி இரவு 10.00 மணிக்கு நானும், எனது அக்கா, எனது தாயார் ஆகியோர்கள் வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்தோம். எங்கள் வீட்டு கொல்லையில் சத்தம் கேட்டது. எங்களது பக்கத்து வீட்டில் வசிக்கும் ஆஜர் எதிரி பாடலீஸ்வரன் என்பவரது மாடு எங்கள் வீட்டின் மாட்டை முட்டியது. எனது பெரிய அக்கா ஸ்ரீதேவி ஆஜர் எதிரி வீட்டிற்கு சென்று அவரது வீட்டில் வேலை செய்யும் தன்ராஜ் என்பவரிடம் மாடு முட்டியது சம்பந்தமாக சொன்னார். அவ்வாறு பேசி கொண்டிருந்தபோது எதிரி பாடலீஸ்வரன் அங்கிருந்து வந்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, எனது தாயாரை கீழே

தள்ளிவிட்டு, எனது அக்காவை கட்டையால் அடித்தார். எங்களை காவல் நிலையத்திற்கு செல்லவிடாமல் தடுத்து, எங்களை தலையை வெட்டி காவல் நிலையத்தில் வைத்தால் யார் கேட்பார் என்று மிரட்டினார். அதன்பிறகு, எனது அக்கா பேரளம் காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தார். மேற்படி புகாரின்பேரில் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

நான் M.Sc படித்துள்ளேன். எனது தகப்பனாருக்கு வீட்டிற்கு அருகே வயல் உள்ளது. எதிரி வீட்டிற்கும், எங்கள் வீட்டிற்கும் இடையே உள்ள இடம் தொடர்பாக எங்களுக்குள் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். அதன் சர்வே நம்பர் எனக்கு தெரியாது. மேற்படி இடத்தில் ரங்கநாதன் (எ) ரங்கன் குடியிருந்து வந்தார். அவர் எனது தகப்பனாரின் சித்தப்பா. மேற்படி இடப்பிரச்சனை சம்பந்தமாக எதிரியின் தகப்பனார், எனது தகப்பனார் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இடப்பிரச்சனை சம்பந்தமாக வருவாய் கோட்டாட்சியரிடம் விசாரணை நடந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் புகார் கொடுத்து மாண்புமிகு திருவாரூர் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மாடு முட்டியதில், எங்கள் மாட்டிற்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. எனது அக்காவிற்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவ சிகிச்சை எடுத்து கொள்ளவில்லை. எங்கள் தெருவில் எத்தனை வீடுகள் என்றால் சுமார் 230 இருக்கும். அக்கம்பக்கத்தினர், யாரும் அப்போது இருந்தார்களா என்றால் யாரும் வரவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல், எந்தவிதமான பிரச்சனையும் நடைபெறவில்லை என்றாலும், இடப்பிரச்சனை சம்பந்தமாக எனது

அக்கா அளித்த பொய்யான புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இடம் சம்பந்தப்பட்ட பிரச்சனை இந்த வழக்கு பிரச்சனைக்கு பின்னிட்டு தான் நடந்தது.

**<u>மறு விசாரணை</u> :**

இல்லை.

(ஒம்/- S. விஜய் ஆனந்த்)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் (மு.கூ.பொ.), நன்னிலம்.